2012 மே 14]

மண்டி, மக்கள் உள்ளே சென்று கழிவறையாகப் பயன்படுத்துகிற அளவுக்கு மோசமாக இருக்கின்றன. ஆகவே, மேற்படி பஸ் நிலையங்கள் இரண்டையும் பராமரிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகங்களின் சார்பாக இயக்கப்படுகின்ற பேருந்துகளுக்குப் புதிய பணிமனைகள் அமைக்கப்பட வேண்டுமென்று 2012–2013 ஆம் ஆண்டு 4 புதிய போக்குவரத்துக் கழக பணிமனைகள் அமைப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அதேபோல, ஏற்கெனவே பழுதடைந்து பராமரிக்கப்படாமல் நிலுவையிலிருந்த போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனைகளையும், பேருந்து நிலையங்களையும் பராமரிப்பதற்குக்கூட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் உத்தரவிட்டு, துறையின் சார்பாக திட்ட மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. விரைவில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்தப் பகுதியில் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று பணிமனை தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

ஹெலிகாப்டர் தளம்

***12882—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளச்சல் தொகுதி, கடலோரப் பகுதிகளில் மீனவர்களைப் பாதுகாக்க ஹெலிகாப்டர் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலில் மீன்பிடிப்பில் ஈடுபட்டிருக்கும்போது கடல் சீற்றம் மற்றும் கடுமையான காற்றின் காரணமாக படகு விபத்துக்குள்ளாகி மீனவர்கள் காணாமல் போகும் நிகழ்வுகளில், காணாமல் போன மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை கடலோரக் காவல் படை மற்றும் கடற்படை வசமுள்ள ஹெலிகாப்டர்கள்மூலம் அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள ஹெலிகாப்டர் தளத்தினைப் பயன்படுத்தி, வான்வழித் தேடுதல் பணியும், கப்பல்கள், படகுகள்மூலம் கடல்வழி தேடுதல் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இப்பணி அவர்களது தலையாய பணி என்பதாலும், கடல் மற்றும் வான்வழித் தேடுதல் தொடர்பான அனைத்து சாதனங்களும் அவர்களது கட்டுப்பாட்டில் உள்ளதாலும் தேடுதல் பணி கடற்படை, இந்திய கடலோரக் காவல் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, குளச்சல் பகுதியில் மட்டுமல்ல, தமிழகத்தில், கடலோரப் பகுதிகளில் எங்கும் ஹெலிகாப்டர் தளம் அமைக்கும் பணி தற்போது பரிசீலனையில் இல்லை என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளச்சல் தொகுதியில் ஆழ்கடலில் மீன் பிடிக்கக்கூடிய திறமையான மீனவர்கள் உள்ளனர். அங்கு ஆண்டு ஒன்றுக்கு 25,000 டன் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. இரண்டு மீன்பிடித் துறைமுகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. எனவே, சுமார் 15,000–க்கு அதிகமான மீனவ சகோதரர்கள் விசைப் படகுகள், fibre படகுகள் மற்றும் வல்லங்கள் மூலமாக ஆழ்கடலில் மீன் பிடிக்கும்போது இயற்கைப் பேரிடர்களால் அவர்களுக்கோ அல்லது படகுகளுக்கோ பாதிப்பு ஏற்பட்டால் அவர்களைப் பாதுகாப்பாகக் கரை சேர்ப்பதற்கு உயிர்காப்பு நடவடிக்கையாக ஹெலிகாப்டர் பயன்படுத்தும் விதத்தில் ஹெலிகாப்டர் தளம் குளச்சல் டச்சுப் போர் நினைவுச் சின்னம் அமைந்துள்ள இடத்திலே அமைக்க வேண்டுகின்றேன். இதை மறுபரிசீலனை செய்ய மாண்புமிகு அமைச்சர் முன்வருவாரா என்பதைக் கேட்பதோடு, உயிர்காப்பு நடவடிக்கைக்காக அதிவிரைவு விசைப் படகு, நவீன தகவல்

தொடர்பு மையம் குளச்சலில் அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 13 மற்றும் 14–11–2011 ஆகிய தேதிகளில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களால் நடத்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் கலந்தாய்வுக் கூட்டத்தில், காணாமல் போகும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காகவும், ஹெலிகாப்டர் தேவைப்படும் நிகழ்வுகளில் வாடகைக்கு அமர்த்திக்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டு அறிவிப்பும் வெளியிடப்பட்டது. மேலும், வான்வழித் தேடுதல் தொடர்பான சாதனங்களில் ஒன்றான ஹெலிகாப்டர் இந்தியக் கடலோரக் காவல் படை மற்றும் இந்தியக் கப்பற்படையின் கட்டுப்பாட்டில் இருப்பதால் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டவாறே கடலில் காணாமல் போகும் மீனவர்களைக் காப்பாற்றுவதற்காக தேவை ஏற்படும்போது நிகழ்வுகளின் அடிப்படையில் ஹெலிகாப்டர்களைக் கூடுதலாக வாடகைக்கு அமர்த்தும் வாய்ப்புகள் குறித்தும், சட்ட விதிமுறைகள் குறித்தும் தெளிவுபடுத்திட, இந்தியக் கடலோரக் காவல் படையின் அறிக்கை கோரப்பட்டுள்ளது.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: எனவே, இந்தியக் கடலோரக் காவல் படையின் அறிக்கை பெறப்பட்டவுடன் வாய்ப்பு இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 261, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. தங்கவேல், மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.